# ஆராய்ச்சி கொள்கை வழிகாட்டல்கள்

கொழும்புப் பல்கலைக்கழகம்

2020

# கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி கொள்கை வழிகாட்டல்

தமிழாக்கம்: இ. லோகேந்திரா, பிரதிப் பதிவாளர், கொழும்புப் பல்கலைக்கழகம்

## முன்னுரை

கொழும்புப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழகத்திற்கு உள்ளேயும் வெளியே அதன் துணை இணைப்பாளர்களினால் மேற்கொள்ளப்படுகிற, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம், கலைத்துவம் மற்றும் புலமைசார் பணிகளை மேற்கொள்வதில் சீர்மை மற்றும் நேர்மைத்திறனின் மிக உயர்ந்த தரத்தினைப் பேணுவதற்கு உறுதிபூண்டுள்ளது. ஆராய்ச்சிகளில் சம்பந்தப்பட்ட அனைவரும் உயர்ந்த தரங்களில் அவதானம் செலுத்தி, அவர்களின் பணிகளின் அனைத்து அம்சங்களிலும் நல்ல நடைமுறைகளைக் கடைப்பிடித்து, ஆராய்ச்சியின் தரம் மற்றும் நேர்மைத்திறனை வெளிப்படையான முறையில் பேண வேண்டும் என்று பல்கலைக்கழகம் எதிர்பார்க்கின்றது. பல்கலைக்கழகம், ஓர் உயர் கல்வி நிறுவனமாக, அறிவை உருவாக்கிப் பரப்புதல், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தினை ஊக்குவித்தல், மற்றும் அதன் நல்ல நடைமுறைகளை ஆதரித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தி ஆராய்ச்சிக் கலாச்சாரத்தில் தொழில்முறை நெறிகளைப் பேணல் ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆகையால், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக் கொள்கை வழிகாட்டி பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய ஒரு தெளிவானதும் துல்லியமானதுமான பகிரங்க அறிக்கையினை வழங்குவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## தொலைநோக்கு:

அதன் பொறுப்புக்களை உறுதிப்படுத்தி கல்விசார் சுதந்திரத்தை பாதுகாக்கின்ற அதேவேளை, அறிவு உருவாக்கம் மற்றும் அறிவுப் பரப்புகையை மேம்படுத்தி விரிவாக்குதல் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மைய அர்ப்பணிப்பாக உள்ளது. இந்த முயற்சிக்கு வசதியளிப்பதற்காக, கொழும்புப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்கி மக்களின் பொது நலனுக்காக அறிவை உருவாக்குவதனை நோக்கமாகக் கொண்ட ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளங்களை ஒதுக்குகின்றது. அறிவார்ந்த ஆர்வத்தை உருவாக்கி, இயற்கை மற்றும் சமூக

உலகங்களைப் பற்றிய ஆழமான புரிதலை உருவாக்கும் நிகழ்வுகள் மற்றும் தோற்றப்பாடுகள் தொடர்பாக ஆய்வுகளை நடாத்துவதற்கு புலமையாளர்களுக்கான சுதந்திரம் இருப்பதை ஒப்புக் கொள்கின்ற அதேவேளை, பல்கலைக்கழகம் அவ்வாறான அறிவார்ந்த தகமைகளை உறுதிப்படுத்தாத ஆராய்ச்சிப் பணிகளுக்கு உகந்த சூழலை வழங்கவோ அங்கீகரிக்கவோ மாட்டாது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக் கொள்கை வழிகாட்டிகளுக்கு அடிப்படையாக நான்கு செயற்பாடுகள் உள்ளன.

- ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்
- வணிகமயமாக்கல்
- ஒழுக்கவியல் நெறிமுறைகளைப் பாதுகாத்தல்
- அறிவினைப் பரப்புதல்

## ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம்

அ) ஆய்வு, புலமைசார் மற்றும் கலைத்துவப் செயற்பாடுகள் ஊடாக ஒரு விடயத் தலைப்பைப் பற்றிய ஒரு விஞ்ஞானபூர்வமான புரிதலை நோக்கிப் புதிய அறிவினை உருவாக்குதல், பிரயோகித்தல், மற்றும் பரப்புதல் ஆராய்ச்சி என வரையறுக்கப்படுகிறது. ஆகவே, இந்தக் கொள்கை, ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் பொருந்தும், அதாவது, வாழ்நாள் பேராசிரியர்கள், பீட உறுப்பினர்கள், பயிலுனர்கள், சிகிச்சைப் பீடத்தவர்கள், பட்டப்பின் மற்றும் இளங்கலைப் பட்டக் கற்கை மாணவர்கள், வருகைதரும் அழைப்பின் பேரிலான பணியாளர்கள் குழாம், வருகைதரும் புலமையாளர்கள், தொழில்முறை இணைப்பாளர்கள் மற்றும் தத்துவக் கலாநிதிப் பட்டப்பின் கற்கையாளர்கள்.

ஆ) பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அல்லது இணைந்துள்ள புலமையாளர்கள் அவர்களின் சொந்த ஆராய்ச்சித் திட்டத்தினை வடிவமைத்து, ஆராய்ச்சியினை மேற்கொண்டு, அவர்களின் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களின் அடிப்படையில் அவர்களின் சொந்த முடிவுகளை உருவாக்குவதற்கு சுதந்திரமுடையவர்கள் ஆவர். பல்கலைக்கழகம் அதற்கான இடம், வசதிகள், நிதிகள், மற்றும் ஆராய்ச்சிக்குத் தேவையான பிற வளங்களை வழங்குவதற்குக் கடமைப்பட்டுள்ளது. ஆராய்ச்சியாளர்கள் அவர்களின் பணிகளுக்காக பல்கலைக்கழத்திடமிருந்து ஆதரவினை நாடுவதற்கும் அதன் இடம், வசதிகள், நிதிகள், மற்றும் ஆராய்ச்சிக்குத் தேவையான பிற வளங்களைப் பயன்படுத்துவதற்கும் உரித்துடையவர்கள் ஆவர்.

மேலே குறிப்பிடப்பட்ட தரப்புக்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இந்தக் கொள்கை வழிகாட்டிகளினால் கட்டுப்பட்டிருப்பதுடன், கொள்கைகள் மீறப்படுவதாக அறிவிக்கப்பட்டால், அவர்கள் கொள்கை வழிகாட்டிகளின் ஏற்பாடுகளின் கீழான

நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவர். ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரும் இந்த ஆராய்ச்சிக் கொள்கை வழிகாடல்களின்பால் கட்டுப்பட்டவர்களாவதுடன், கொள்கை பற்றிய விழிப்புணர்வின்மை, அல்லது கலாச்சார விழிப்புணர்வின்மை, அல்லது தனிப்பட்ட பிரச்சினைகள், போன்றவை அதன் மீறலுக்கான காரணங்களாக இருக்க முடியாது.

எந்தவொரு புலமைசார் செயற்பாட்டிற்கும், ஆராய்ச்சி, புத்தாக்கம், மற்றும் நடத்தை ஆகியவற்றிலான பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் பின்வருமாறு:

ஆராய்ச்சி, புத்தாக்கம் மற்றும் கலைத்துவப் பணியில் ஈடுபட்டுள்ள கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அனைத்து உறுப்பினர்களும் கட்டாயம்:

அ) ஆராய்ச்சி நேர்மைத்திறனின் மிகவுயர்ந்த தர நியமங்களைப் பேண வேண்டும்.

ஆ) மனிதப் பங்கேற்பாளர்கள் மற்றும் விலங்கு விடயங்கள், களப்பணிகள், உயிராபத்தான, கதிரியக்க சமதானிகள், மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிக்குத் தேவையான அனைத்து ஒப்புதல்கள் மற்றும் பயிற்சியினைப் பெற்றிருக்க வேண்டும்.

இ) ஒப்புதலளிக்கப்பட்ட நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஈ) தகவல் சுதந்திரம், தகவல் அறியும் உரிமைச் சட்டங்கள், மற்றும் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களின் நடத்தை தொடர்பான பாதுகாப்புக் கொள்கைகள் குறித்த தேசிய மற்றும் நிறுவனஞ்சார் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

(உ) எழுத்தாளர்கள், நிதி வழங்குனர்கள்/ நிதியிடல் முகவர்கள், மற்றும் அனுசரணையாளர்கள் உள்ளிட்ட அனைத்து ஆராய்ச்சிக்கான நூலாசிரியர்கள்/ படைப்பாளிகள், பங்களிப்பாளர்கள், பங்களிப்புக்கள் ஆகியனவற்றை அங்கீகரித்து ஒப்புக்கொள்ள வேண்டும்.

(ஊ) இந்த ஆராய்ச்சிக் கொள்கையின் எந்த பொறுப்பான நடத்தை மீறலும் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

(எ) ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினர்களும், அணுகலுக்கான சுதந்திரம் உள்ளிட்ட ஒரு முக்கிய கோட்பாடாக, ஆராய்ச்சியில் திறந்த தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களின் பெறுபேறுகளை பிரசுரிப்பது தொடர்பான வரையறைகள் உள்ளிட்ட, இரகசியத் தன்மையைக் கொழும்புப் பல்கலைக்கழகம் தடை செய்கிறது.

(ஏ) பல்கலைக்கழகம், தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில், துறைகளுக்கு இடையிலான அதிக ஒத்துழைப்பு உள்ளிட்ட, ஆராய்ச்சி மற்றும் நடைமுறைகளுகு இடையிலான இடைவெளியைச் சற்றுக் குறைப்பதற்கு கூட்டு ஆராய்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்.

(ஐ) முகாமைத்துவ நிலையங்கள், நூலகங்கள், நிறுவனங்கள், மற்றும் அச்சுக்கூடங்களை நிர்வகித்தல்; ஆதன முகாமைத்துவம், ஆராய்ச்சியின் பின்னரான எச்சங்கள் மற்றும் கழிவுகளின் அகற்றல்; அனுசரணையளிக்கப்பட்ட திட்டங்கள், நிதி முகாமைத்துவம், திட்ட நிருவாகம், ஆராய்ச்சிக்கு உதவுவதற்கு குழுக்கள் மற்றும் செயலணிகளை அமைத்தல், மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றின் போது பல்கலைக்கழகத்தின் கொள்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

## ஆராய்ச்சி வணிகமயமாக்கல் தொடர்பான கொள்கை

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் முக்கியமான பலங்களில் ஒன்றாகவிருப்பது அதிநவீன ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள அர்ப்பணிப்புடனான, பல்வகைமையானதும் முதிர்ந்ததுமான ஆராய்ச்சியாளர்களின் அணி ஆகும். ஆகவே, இந்த ஆராய்ச்சிக் கொள்கை வழிகாட்டல்களின் நெடுநோக்கு ஆராய்ச்சி, மேம்பாடு, மற்றும் வர்த்தகமயமாக்கலுக்கான பல்கலைக்கழகத்தின் உறுதிப்பாடாகும். கொழும்புப் பல்கலைக்கழகம் ஓர் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தினால்- உந்தப்பட்ட கல்விசார் கலாச்சாரத்தை உருவாக்க முயற்சிப்பதுடன் ஆராய்ச்சிப் பெறுபேறுகள் மக்களின் நன்மைக்கான பயனுள்ள உற்பத்திகள் மற்றும் சேவைகளாக பொதுப் பாவனைக்கு மாற்றப்பட்டு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை தரமுயர்த்துமென்ற நெடுநோக்கினைக் கொண்டுள்ளது. பல்கலைக்கழக ஆராய்ச்சியில் இருந்து விளையும் கண்டுபிடிப்புக்கள் மற்றும் தொழில்நுட்பம் பாதுகாக்கப்பட்டு வர்த்தகமயமாக்கப்பட வேண்டும் என்பதனை கொழும்புப் பல்கலைக்கழகம் அங்கீகரிக்கின்றது. மேற் குறிப்பிட்ட குறிக்கோளினை அடைவதற்கு, பல்கலைக்கழக ஆராய்ச்சி வருவிளைவுகள் தொழிற்றுறைகள் மற்றும் வணிகங்களிற்கு மாற்றப்பட வேண்டியது கட்டாயமாகும். ஆகையால், சில ஆராய்ச்சி வெளியீடுகள் சமூகப் பயன் நோக்கங்களுக்காக பிரசுரிக்கப்படக் கூடியாதாக இருந்தாலும் கூட, அவற்றிற்குக் காப்புரிமம் பெறப்பட்டு வர்த்தகமயமாக மேம்படுத்தப்படும் வரையில் இரகசியமாக வைக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

## தொழிற்றுறையுடன் கூட்டாக உழைத்தல்

வர்த்தகமயமாக்கப்பட்ட ஆராய்ச்சியில், பல்கலைக்கழக சமூகம் வணிகங்கள், அரசுகள், அல்லது ஏதாவது பொருத்தமான நிறுவனங்கள் ஆகியவற்றுடன் ஒத்துழைப்புடன் பணியாற்ற வேண்டும் என்பதனையும் அந்தக் ஒத்துழைப்பு பல வடிவங்களை எடுக்கலாம் என்பதனையும் கொழும்புப் பல்கலைக்கழகம் அங்கீகரிக்கிறது. கூட்டு

ஆராய்ச்சி கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பீடங்களுக்கு இடையில் அல்லது பீடங்களினுள், பிற தேசிய அல்லது சர்வதேச பல்கலைக்கழகங்களுடன், அல்லது தொழிற்றுறைப் பங்காளிகளுடன் மேற்கொள்ளப்படலாம். அவ்வாறு கூட்டு ஆராய்ச்சியினை மேற்கொள்கின்ற போது அந்த ஆராய்ச்சிச் சமூகம் புலமைச் சொத்துரிமை தொடர்பாக கூட்டு உடன்படிக்கைகளை ஏற்படுத்த வேண்டும்.

புலமைச் சொத்து உரிமை தொடர்பான ஏதேனும் பிரச்சினை ஒரு தொழிற்றுறை அனுசரணையாளர் அல்லது வர்த்தகமயமாக்கற் பங்காளருடன் கலந்துரையாடல்களின் தொடக்கத்தில் தெளிவுபடுத்தப்பட வேண்டும். உடன்படிக்கை ஒன்றினை ஏற்படுத்துவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்களும், ஒரு பொது நிறுவனமாக கொழும்புப் பல்கலைக்கழகம் கூட்டு ஆராய்ச்சியினை முகாமைத்துவம் செய்வதற்காக முன்வைத்துள்ள கொள்கைகள், செயல்முறைகள், மற்றும் வழிமுறைகள் பற்றிய முழுமையான புரிதலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வர்த்தகமயமாக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கூட்டு ஆராய்ச்சித் திட்டங்களில் ஈடுபடுகின்ற போது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிச் சமூகத்தினால் பின்வரும் விடயங்கள் பற்றி கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்:

அ. புலமைச் சொத்து உரிமை மற்றும் ஆராய்ச்சிப் பெறுபேறுகளின் உடமை உரிமை

ஆ. ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினர்களாலும் புலமைச் சொத்துரிமைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டு, பாதுகாத்து, மதிக்கப்பட வேண்டும்

இ. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொறுப்புக்கள்

ஈ. அறிவினைப் பரப்புதல் மற்றும் புலமைச் சொத்து உரிமைகளை மாற்றுதல்

உ. வணிகமயமாக்கல் தேர்வுரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்

ஊ. தேசிய மற்றும் பொது நலன்களைப் பாதுகாத்தல்

எ. கொழும்புப் பல்கலைக்கழகம் உயிரியல் சுரண்டல் என அறியப்படுகின்ற உயிரியல் வளங்கள் மற்றும் பாரம்பரிய அறிவின் காப்புரிமை மற்றும் பண்டமயமாக்கலை உள்ளடக்கிய யாதாயினும் ஆராய்ச்சி அல்லது புத்தாக்கங்களை நோக்கி பூச்சிய சகிப்புத்தன்மையைக் கடைப்பிடிக்கிறது. இலங்கையின் உயிர்ப் பல்வகைமை தொடர்பான யாதாயினும் ஆராய்ச்சி அல்லது புத்தாக்கத்தில் ஈடுபடுகின்ற போது இலங்கை அரசின் தாவர மற்றும் விலங்குப் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மற்றும் வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் ஆகியவற்றினைப் பின்பற்றுமாறு கொழும்புப் பல்கலைக்கழகம் அதன் சமூகத்தைத் தூண்டுகிறது.

ஏ. கூட்டு ஆராய்ச்சி மற்றும் ஒப்பந்த ஆராய்ச்சி உடன்படிக்கைகள்

ஐ. அர்ப்பணிப்பின் முரண்பாடு: வெளிவாரி நிறுவனங்களுடன் கூட்டு அல்லது ஒப்பந்த ஆராய்ச்சியில் ஈடுபடுகின்ற போது அது பல்கலைக்கழகத்தில் செலவிடத் தேவைப்படுகின்ற காலம் மற்றும் சக்தி மீதும் கொழும்புப் பல்கலைக்கழகத்தை நோக்கிய பொறுப்புக்கள் மீதும் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருப்பதுடன் அர்ப்பணிப்பு முரண்பாடுகள் எழக் கூடும்

ஒ. நலன் முரண்பாடு: கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தனிப்பட்ட ஆராய்ச்சியாளர் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தில் இருந்தான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புலமைச் சொத்து உரிமையில் இருந்து உருவாக்கப்பட்ட ஒரு வியாபாரத்தில் தனிப்பட்ட முறையில் முதலீடு செய்தால் அல்லது ஈடுபட்டிருந்தால் நலன் முரண்பாடுகள் எழக் கூடும்

ஓ. ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பணிக்கு வெகுமதியளித்தலும் சமூக நன்மைக்கான அறிவுப் பரிமாற்றமும்

ஔ. நிதியிடலை முகாமைத்துவம் செய்தலும் வருமானப் பகிர்வும்

# ஒழுக்க நெறிமுறைகளுக்குப் பாதுகாப்பளித்தல்

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி நெறிமுறைகள் தொடர்பான கொள்கை ஆராய்ச்சித் திட்டமிடுதல் மற்றும் நடாத்துதல், ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்களை வெளியிடுதல் மற்றும் தரவு முகாமைத்துவம் ஆகியவற்றில் நடவடிக்கைக் கோட்பாடுகளின் ஒட்டுமொத்தக் கட்டமைப்பினை வழங்குகின்றது. இந்தக் கொள்கை, பணியாளர் குழாம், மனிதர்கள் மற்றும் விலங்குகள் விடயங்கள் மற்றும் உணர்திறன்/ தனிப்பட்ட தரவு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் சார்பான அல்லது பல்கலைக்கழகத்தினுள் ஆராய்ச்சி நடத்துகின்ற மாணவர்கள் மற்றும் வருகைதருபவர்கள் உள்ளிட்ட அனைத்துப் பல்கலைக்கழக சமூகத்திற்கும் பொருந்தும். ஆராய்ச்சி நெறிமுறைகள் தொடர்பான கொள்கையை உருவாக்குவதன் நோக்கம் நேர்மைத்திறன், பொறுப்புக்கூறல், தொழில்வாண்மை, மற்றும் கல்விசார் சால்புமிகு திறன் ஆகியனவற்றினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை ஆராய்ச்சியின் அனைத்து தோற்றப்பாடுகளிலும் நல்ல நடைமுறைகளை ஊக்குவிப்பதாகும். ஆராய்ச்சி நெறிமுறைகள் பற்றிய இந்தக் கொள்கையானது, கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் சேர்ந்தவர்களால் பரிசோதிக்கப்பட்டுள்ள அல்லது நடத்தப்படுகின்ற ஆராய்ச்சிக் கருத்திட்டமொன்றுடன் சம்பந்தப்படுகின்ற சாத்தியமான இடர்கள் மற்றும் தீங்குகளை முன்னதாகவே அடையாளம் காணவும் முகாமைத்துவம் செய்யவும் உதவும். [குறிப்பு: ஆராய்ச்சி நெறிமுறைகள் பற்றிய இந்தக் கொள்கையானது இந்த விடயத்துடன் தொடர்புடைய கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பிற பொருத்தமான கொள்கைகள், செயல்பாட்டு செயல்முறைகள், நடைமுறைக் கோவைகள் மற்றும் யாதாயினும் ஒழுங்கு விதிகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டும்].

## ஆராய்ச்சி நெறிமுறைகள் தொடர்பான கொள்கை (முழுப் பல்கலைக்கழகத்திற்கும் பொருத்தமானது)

### 1. அடிப்படைக் கோட்பாடுகள்

அ) ஆராய்ச்சி திட்டம் தனிப்பட்டபவர்கள், நிறுவனங்கள், சமூகங்கள் அல்லது முழு சமூகத்திற்கும் நன்மைகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்.

ஆ) ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சிச் செயல்முறை முழுவதும் மனித விடயங்களின் கண்ணியம், உரிமைகள், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு ஆகியனவற்றிற்குப் பாதுகாப்பளித்து, அங்கீகரித்து, மதிப்பளிக்கும் நெடுநோக்கினைக் கொண்டிருக்க வேண்டும்.

இ) மனித மற்றும் விலங்கு விடயங்கள் மற்றும் உணர்திறன்/ தனிப்பட்ட தரவு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள், ஆராய்ச்சிப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்னதாக பொருத்தமான நெறிமுறை மீளாய்வுக் குழுக்களின் (நெ.மீ.கு.) நெறிமுறைகள் தடைநீக்க அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும்.

ஈ) ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சியில் பயன்படுத்துகின்ற தரவு/தரவுத்தளங்களை வழுக்கள் மற்றும் தேவைக்கதிகமல்லாததும், போதுமான அளவு உள்ளடக்கியதும் விரிவானதும், யதார்த்தமானதும் நம்பகரமானதும், பொருத்தமாகவும் பாதுகாப்பாகவும் சேமிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டதாகவும், தேவைக்கேற்ப அணுகப்படக் கூடியதாகவும் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

உ) திரட்டப்பட்ட தரவின் அநாமதேயத்தன்மை மற்றும் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஆராய்ச்சியாளர்கள் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஊ) ஆராய்ச்சியாளர்கள் அனைத்து சாத்தியமான வழிகளையும் ஆராய்ச்சி செயல்முறை முழுவதும் மற்றும் ஆய்வுக்குப் பிந்திய ஒரு கணிசமான காலப் பகுதியிலும் பயனுள்ள தரவு முகாமைத்துவத்திற்காகப் பயன்படுத்த வேண்டும்.

எ) ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சி சூழமைவு தொடர்பான ஒழுங்கமைப்பு, சட்ட, சமூக- பண்பாட்டு மற்றும் அரசியல் சூழல் மற்றும் தரங்களை ஆராய்ச்சியாளர்கள் பரிசீலிக்க வேண்டும்.

## 2. அடிப்படை மதிப்புகள்

அ) முன்மொழியப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் நவீனமானதாகவும், நடப்பிலுள்ள அறிவுத் தளத்திற்கு மதிப்புச் சேர்ப்பதாகவும் கருதப்பட்ட பங்குதாரர்களுக்கு நன்மைபயப்பதாகவும் இருக்க வேண்டும்

ஆ) நோக்கம், செயல்முறைகள், நடத்தை, எதிர்பார்ப்புக்கள், மற்றும் விளைவுகள் உள்ளிட்ட ஆராய்ச்சி தொடர்பான அனைத்துப் பொருத்தமான தகவல்களும் பங்கேற்பாளர்களுக்கு பொருத்தமாக வெளிப்படுத்த வேண்டும்

இ) பங்குபற்றுவதில் இருந்து பின்வாங்குவதற்கும் எந்தவொரு தண்டனைக்கும் உட்படாமல் ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை நிறுத்தி வைப்பதற்கும் பங்கேற்பாளர்களுக்கு இருக்கின்ற உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்

ஈ) மேலதிக தகவல்களை நாடுவதற்கும், அவர்கள் திருப்தியடையாதவிடத்து குறித்த நபர்களைத் தொடர்பு கொள்வதற்கும் ஏதாவது முறைப்பாட்டினை மேற்கொள்வதற்கும் பங்கேற்பாளர்களுக்கு இருக்கின்ற உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும்

உ) ஆராய்ச்சி நடவடிக்கையின் போது ஏதாவது பௌதீக அல்லது உளவியல் தீங்குகளிலிருந்து, அவர்கள் உள்ளிட்ட, அனைத்துப் பங்கேற்பாளர்களையும்

பாதுகாப்பதற்கு ஆராய்ச்சியாளர்கள் அனைத்துச் சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்

ஊ) அனைத்துப் பங்கேற்பாளர்களிடமிருந்தும் ஆராய்ச்சியில் பங்கேற்பதற்கு தகவலறிவிக்கப்பட்ட ஒப்புதல் பெறப்பட்டிருக்க வேண்டும்

எ) அங்கவீனக் குறைபாடுள்ள மக்கள், குழந்தைகள், உடல் மற்றும் உளநலனற்ற மக்கள், சிறைக்கைதிகள், புனர்வாழ்வு நிலையங்களிலுள்ளவர்கள் முதலியோர் போன்ற பாதிக்கப்படக் கூடிய பங்கேற்பாளர் குழுக்களைக் கையாளுகின்ற போது ஆராய்ச்சியாளர்கள் விசேட கவனம் எடுக்க வேண்டும்

ஏ) அனைத்துப் பங்கேற்பாளர்களும் எந்தவொரு பாரபட்சமோ அல்லது பாகுபாடோ இன்றி கண்ணியமாகவும் சமத்துவமாகவும் நடாத்தப்படுதல் வேண்டும்

**ஆராய்ச்சி வெளியீடுகள் தொடர்பான கொள்கை**

ஆராய்ச்சி வெளியீடுகள் தொடர்பான கொள்கை பல்கலைக்கழகத்தினதும் அதன் ஆராய்ச்சிச் சமூகத்தினதும் நலன்களைப் பாதுகாப்பதனை நோக்கமாக கொண்டுள்ளது. அது அறிவு உருவாக்கம் மற்றும் சமூக வெளியெட்டலுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அர்ப்பணிப்பினையும் கூட முறைப்படுத்துகின்றது. படைப்புரிமையை ஏற்றுக்கொள்வதில் படைப்புரிமை நடைமுறைகள் நேர்மையாக இருக்க வேண்டும் என்பதனை கொழும்புப் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொள்கின்றது. அவ்வாறான நடவடிக்கைகள் கொழும்புப் பல்கலைக்கழகத்தினதும் அதன் ஆராய்ச்சி சமூகத்தினதும் தலையாய முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

அ) ஆராய்ச்சி எண்ணக்கருவை உருவாக்குவது, ஆராய்ச்சியை நடத்துவது, மற்றும் பெறுபேறுகளை விளக்குவது உள்ளடங்கலாக ஆராய்ச்சிப் பணிகளில் கணிசமானளவிற்கு ஈடுபட்டிருந்த அனைவரும் முறையாக ஏற்று அங்கீகரிக்கப்பட வேண்டும்.

ஆ) ஒரு ஆராய்ச்சி வெளியீட்டின் படைப்புரிமைக்கு ஒரு நபர்/ அந்த வெளியீட்டின் கணிசமான ஒரு பகுதியை எழுதியவர் மற்றும் அந்தப் பணிக்கு கணிசமான அறிவுசார் பங்களிப்பினைச் செய்தவர் மட்டுமே உரிமை கோர முடியும். கூறப்பட்ட பங்களிப்பு கருத்தாக்கம், வடிவமைப்பு, பகுப்பாய்வு மற்றும்/ அல்லது தரவின் விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் அளவிடப்படும்.

இ) ஆராய்ச்சி வெளியீடுகளின் ஆக்கவாளர்கள் குறித்து துறை, பீடம், நிறுவனம் அல்லது கொழும்புப் பல்கலைக்கழகத்துடனான அவர்களுடைய தொடர்பை வெளிப்படுத்துதல் வேண்டும்.

ஈ) ஆராய்ச்சி வெளியீடுகளின் படைப்பாளர்கள் நியமமான மற்றும் தொடர்ச்சியான ஆசிரியர் குறிகாட்டியைப் பயன்படுத்த வேண்டும்.

உ) படைப்பாளர்கள் ஆராய்ச்சி நடத்துகின்ற / அல்லது பெறுபேறுகளை அறிவிக்கின்ற போது ஏதாவது நலன் முரண்பாடு அல்லது அனுபவித்த செல்வாக்கினை வெளிப்படுத்த வேண்டும்.

ஊ) படைப்பாளர்கள் கொழும்புப் பல்கலைக்கழத்திடமிருந்து அல்லது பிறிதொரு தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொண்ட நிதி அல்லது பிற உதவிகளை அங்கீகரிக்க வேண்டும்.

ஏ) பொருத்தமான விடத்து படைப்பாளர்கள் அனைத்து வெளியிடப்பட்ட சகா-மீளாய்வு செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் மாநாட்டு நடவடிக்கைக் குறிப்புக்கள் போன்ற ஆராய்ச்சி வெளியீடுகளை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் காப்பகத்தில் வைப்புச்செய்ய வேண்டும்.

எ) படைப்பாளர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புலமைச் சொத்து கொள்கையுடன் இணங்க வேண்டும்.

**கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக வியாபார இணைப்புச் சிற்றலகின் வகிபாகம்**

பல்கலைக்கழகங்கள் உலகம் முழுவதிலும் அவர்களின் பணிகளுக்கு மேலதிகமாக கல்விசார் ஆராய்ச்சி வர்த்தகமயமாக்கலில் தற்போது ஒரு கருத்தியல் மாற்றத்தைத் தழுவுகின்றன. 2018 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக வியாபார இணைப்புச் (ப.வி.இ.) சிற்றலகு, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புலமைச் சொத்துக் கொள்கைக்கு இணங்க பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி வெளியீடுகளின் பாதுகாப்பு மற்றும் வர்த்தகமயமாக்கலுக்கு பல்கலைக்கழகத்தின் உறுதிப்பாட்டினை மீள்வலியுறுத்துகிறது. கொழும்புப் பல்கலைக்கழக- பல்கலைக்கழக வியாபார இணைப்புச் சிற்றலகின் செயற்பாடுகள் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப மாற்று அலுவலகமாக உள்ளது, அது மற்றவைகளுக்கு இடையில், பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட தொழில்நுட்ப மாற்றம், கல்வியாளர்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளில் இருந்து விளையும் புலமைச் சொத்து உரிமைகளை பாதுகாத்து முகாமைத்துவம் செய்தல், மற்றும் பல்கலைக்கழக- தொழிற்றுறை ஒத்துழைப்புக்களை மேம்படுத்துதல் ஆகியவற்றில் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களுக்கு தேவையான ஆதரவினை வழங்குகிறது

**ஒழுக்காற்றுப் பரப்புக்கள் தொடர்பான நெறிமுறைகள்**

வெவ்வேறு துறைசார் பரப்புக்கள் தொடர்பான நெறிமுறைகள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் அந்தந்தக் குறித்த பீடங்கள் மற்றும் நிறுவனங்களின் ஆராய்ச்சிக் குழுக்கள் (ஆ.கு.) மற்றும்/ அல்லது ஒழுக்கவியல் நெறிமுறைகள் மீளாய்வுக் குழுக்களினால் (ஒ.நெ.மீ.கு.) பரிசீலிக்கப்பட்டு கையாளப்படும். இதற்காக, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடமும் அல்லது நிறுவனமும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிக் கொள்கை

வழிகாட்டல்களினால் வழங்கப்பட்ட வழிகாட்டிகளைக் கடைப்பிடிக்க வேண்டியதுடன் நெறிமுறைகள் மீளாய்வுக் குழுக்களை நியமித்து, நெறிமுறை வழிகாட்டல்களை உருவாக்கி, ஒழுக்கவியல் நெறிமுறை தடை நீக்கல் வழிமுறை மற்றும் செயல்முறையை ஏற்படுத்தி, அதன் துறைசார் பரப்புக்களில், செயல்ப்பாட்டு வழிமுறைக்குப் பொருத்தமாக, பொருத்தமான நெறிமுறைத் தடைநீக்கல் ஆவணங்களை உருவாக்குதல் வேண்டும். தொடக்கக் கட்டத்தில் ஆராய்ச்சி முன்மொழிவுத் திட்டம் (நெறிமுறைத் தடைநீக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்காக) அத்துடன் திட்டத்தின் நிறைவில் இறுதி ஆராய்ச்சி விளைவு (நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டமையைச் சரிபார்ப்பதற்காக) மனித மற்றும் விலங்கு விடயங்கள் மற்றும் உணர்திறன்மிக்க/ தனிப்பட்ட தரவு, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பீடத்திலும் அல்லது நிறுவனத்திலும் ஒழுக்கவியல் நெறிமுறைகள் மீளாய்வுக் குழுவினால் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

**வெவ்வேறு துறைசார் பரப்புக்களில் ஒழுக்கவியல் நெறிமுறைகள் தடைநீக்கல்**

நெறிமுறைகள் தடை நீக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் ஆராய்ச்சித் திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்பாக ஒரு பூரணமான ஆராய்ச்சி முன்மொழிவுத் திட்டத்துடன் பொருத்தமான நெ.மீ.கு. ற்கு அனுப்பப்பட வேண்டும். ஒ.நெ.மீ.கு. கூட்டங்கள் காலா காலத்தில் ஒரு கிரமமான அடிப்படையில் நடாத்தப்பட்டு, பின்வரும் பரப்புக்களின் உசாத்துணையுடன் பின்னூட்டல் வழங்கப்பட வெண்டும்.

- அ) ஆராய்ச்சி நவீனமானதும் துறைசார் பரப்பில் நடப்பிலுள்ள அறிவுத் தளத்திற்கு மேலும் அறிவு சேர்ப்பதாகவும் உள்ளது
- ஆ) ஆராய்ச்சி விளைவுகள் அதன் பங்குதாரர்களுக்கு நன்மையளிப்பதாக இருக்கின்றன

இ) முன்மொழியப்பட்ட திட்டத்தினை மேற்கொண்டு செல்வதற்கு ஆராய்ச்சியாளர்கள் தகுதியுடையவர்களா என்பது

ஈ) முன்மொழியப்பட்ட திட்டம் சட்ட, நிதி, நெறிமுறை, மற்றும் பிற வழிகாட்டல்களுடன் இணங்குகின்றனவா என்பது

உ) ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பிற பங்கேற்பாளர்களுக்கு ஏற்படக் கூடிய சாத்தியமான ஆபத்துக்கள் மற்றும் தீங்குகளைக் குறைப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டுள்ளனவா என்பது

ஊ) செலவுகள் மற்றும் அபாயங்கள் ஆராய்ச்சித் திட்டத்தின் சாத்தியமான நன்மைகளை விட அதிகமானவையா என்பது

## ஆராய்ச்சி நெறிமுறைகளின் மீறல்களை அறிவிப்பதில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

ஆராய்ச்சி நெறிமுறைகளை மீறுவதற்கான நடைமுறையினை கடைப்பிடிப்பதும் செயற்படுத்துவதும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் நடைமுறைகளைப் பின்பற்றுபவர்களிடையேயான நெறிமுறைகளை மேம்படுத்துவதற்கான உறுதிப்பாட்டினை செல்லுபடியாக்குகிறது. இந்த செயல்முறைகள் நெறிமுறைத் தரங்களைப் பேணுவதற்காகவும் மீறல் சாற்றுதல் அறிவிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அத்தகைய தரங்களை செயற்படுத்துவதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஆராய்ச்சி நெறிமுறைகளின் மீறல் முறையாக அறிவிக்கப்பட்டு, எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆராய்ச்சி செயல்முறையின் அனைத்து அம்சங்களையும் பாதுகாப்பதாக இருக்க வேண்டும். எடுக்கப்படும் நடவடிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

அ) ஆராய்ச்சி மேம்பாட்டு மையத்தின் ஆதரவின் கீழ் ஒரு மீளாய்வுக் குழுவினை ஏற்படுத்துதல், அது ஆராய்ச்சி நெறிமுறை மீறல்கள் பற்றிய சாற்றதல்களைப் பரிசீலித்து அவற்றின் தகுதிகளைத் தீர்மானிக்கும்.

ஆ) குழுவின் அமைப்புக்கூறு பின்வருமாறு அமையும்:

1. பீடத்தின் ஆராய்ச்சிக் குழுவின் உறுப்பினர் ஒருவர்
2. ஒரு சட்ட ஆலோசகர்
3. ஒரு துறைசார் விடய நிபுணர்
4. வெளிவாரி நிறுவனம் ஒன்றில் இருந்து துறைசார் விடய நிபுணர்

இ) அறிவிக்கும் செயல்முறை:

அநாமதேய மற்றும் இரகசியத்தன்மை: தவறான சாத்துதல்களினால் நற்பெயருக்கு களங்கம் ஏற்படக் கூடிய சாத்தியம் இருப்பதனால் அநாமதேய சாற்றுதல்கள் அனுமதிக்கப்பட மாட்டாது. எவ்வாறாயினும், ஆராய்ச்சி நெறிமுறை மீறலைப் பற்றி முறைப்பாடளிக்கும் நபரின் அடையாளம் கண்டிப்பாக இரகசியமாக வைக்கப்பட வேண்டும்.

ஈ) நெறிமுறைகள் மீளாய்வுக் குழுவின் தீர்மானம் மற்றும் பணிப்புரைகள்

விசாரணையின் பின்னர், விசாரணையின் பதிவின் அடிப்படையில் குறித்த உண்மையான கண்டுபிடிப்புக்களை உள்ளடக்கி, நெறிமுறை மீளாய்வுக் குழு வழக்கின் சுருக்கத்தினைத் தயாரிக்கும். கூறப்பட்ட நெறிமுறைகள் மீறல்கள் தொடர்பான ஒரு இறுதி தீர்ப்பு மற்றும் யாதாயினும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் பற்றிய ஒரு அறிக்கை ஆகியன வழங்கப்படும். தீர்மானம் மற்றும் பணிப்புரைகள் பதிலளிப்பவருக்கும் முறைப்பாட்டாளருக்கும் அனுப்பப்படும்.

உ) அறிக்கையிடல் ஆவணங்கள்:

ஒரு நெறிமுறைகள் மீறல் இடம்பெற்றதாக நிரூபிக்கப்பட்டால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த நடவடிக்கைகள் மீறலின்

பாரதூரத் தன்மையைப் பொறுத்துப் பரிசீலிக்கப்படுவதுடன், அவற்றிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது, பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

1. ஆராய்ச்சியாளரது அல்லது ஆராய்ச்சியாளர்களின் தனிப்பட்ட கோவை/ கோவைகளுக்கு ஒரு குறிப்புடன் ஒரு தனிப்பட்ட கண்டனம்
2. ஒரு பகிரங்க கண்டனம்

ஊ) பின்நோக்காதிருத்தல்: இந்தக் குழு ஆராய்ச்சி கொள்கை மற்றும் வழிகாட்டல்கள் நடைமுறைக்கு இடப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் இடம்பெறுகின்ற நெறிமுறைகள் மீறல் பற்றிய முறைப்பாடுகளை மாத்திரம் விசாரிக்கும்.

**சர்வதேச தர நியமங்களுடன் இணங்கி ஒழுக்கவியல் நெறிமுறைகள் அலுவலகம் ஒன்றினை ஏற்படுத்துதல்**

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சொந்த விவகாரங்களின் நேர்மைத்திறன் விடயங்களைக் கவனிப்பது அதன் கல்விசார் நோக்கங்களுக்கு அடிப்படையானதாக உள்ளது. அது சமூகத்திற்கானதும் அதன் பொது நலனுக்கானதுமான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வகிபாகத்தினைப் பாதுகாக்கின்றது. ஆராய்ச்சி சமூகத்திற்கான சேவை வழங்கல்களின் அடிப்படையில் புரிந்து கொள்ளப்பட்டிருந்தால், கல்வியாளர்கள் சமூகம்சார்ந்த சிக்கல் மற்றும் பிரச்சினைகளுக்கு அறிவார்ந்த தீர்வுகளை நாடுவதற்குப் பொறுப்பாக இருப்பார்கள். ஆகையால், கொழும்புப் பல்கலைக்கழகம் ஒரு நெறிமுறைகள் அலுவலகத்தை ஏற்படுத்தி ஒரு ஒழுக்கவியல் நெறிமுறைகள் அலுவலரை நியமிப்பதற்கு உரித்துடையது. இந்த நிறுவனமானது கொழும்புப் பல்கலைக்கழகத்திலுள்ள பீடங்கள் மற்றும் நிறுவனங்களின் ஒழுக்கவியல் நெறிமுறை மீளாய்வுக் குழுக்களுடன் (ஒ.நெ.மீ.கு.) இணைந்து செயற்படுதல் வேண்டும்.

## ஒழுக்கவியல் நெறிமுறைகள் அலுவலகத்தின் வகிபாகம்

அ. ஆராய்ச்சி ஒழுக்கவியல் நெறிமுறைகள் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ச்சி ஒழுக்கவியல் நெறிமுறைகள் மீளாய்வுக் குழுக்களுக்கு ஆலோசனை வழங்குதல்

ஆ. இளங்கலை, பட்டப் பின் மற்றும் தோழமை மட்டங்களில் ஒழுக்கவியல் நெறிமுறை கோட்பாடுகள் தொடர்பான தகவல்களை வழங்குதலும் கிடைக்கச் செய்தலும்

இ. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி ஒழுக்கவியல் நெறிமுறைகள் மற்றும் நேர்மைத்திறன் பாதுகாப்பிற்காக ஆராய்ச்சிக் குழுக்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் நெறிமுறைகள் மீளாய்வுக் குழுக்களுடன் ஒருங்கிணைப்பதற்கான மத்திய மையமாகவிருத்தல்

ஈ. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பீடங்கள் மற்றும் நிறுவனங்களின் ஆராய்ச்சிக் குழுக்களுடன் ஆராய்ச்சி நெறிமுறைகள் மற்றும் நேர்மைத்திறன் மற்றும் ஒப்புதலளித்தல் செயல்முறைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் பயிற்றுவிப்பதற்கும் ஒத்துழைத்தல்

உ. நெறிமுறைகள் ஒப்புதல்களை சேகரித்தலும் ஆவணப்படுத்தலும் மற்றும் இறுதி சமர்ப்பணங்களை ஆராய்வதன் மூலம் நெறிமுறைகள் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டு சரியாக கவனத்தில் எடுக்கப்பட்டு இருப்பதனை உறுதிப்படுத்துதல். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பீடங்கள் மற்றும் நிறுவனங்களின் நெறிமுறைகள் மீளாய்வுக் குழுக்களிடமிருந்து ஆராய்ச்சி முன்மொழிவுத் திட்டத்திற்கான ஒப்புதல் பெறப்பட்டதன் பின்னர் பதிப்பிப்பதற்கு அல்லது கொள்கைவகுப்பிற்கு அனுப்பப்படுவதற்கு முன்னர் ஆராய்ச்சி நெறிமுறைகள் மீறப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து ஆராய்ச்சியும் நெறிமுறைகள் அலுவலரினால் ஒப்புதலளிக்கப்பட வேண்டும்.

ஊ. ஆராய்ச்சி நெறிமுறைகள் பாதுகாக்கப்படுவதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச அணிகளுடன் ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்கும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கல்வியாளர்களை பயிற்றுவிப்பதற்கு கல்விமான்களைத் தருவிப்பதற்காக அல்லது நெறிமுறைகள் மீளாய்வுக் குழு உறுப்பினர்களை நிதியிடப்பட்ட மாநாடுகளுக்கு அனுப்புவதற்காக வாய்ப்புக்களை நாடுதல்

**ஆராய்ச்சி தரவு முகாமைத்துவக் கொள்கை**

ஆராய்ச்சித் தரவு "ஒரு வாதம், கோட்பாடு அல்லது சோதனையை அடிப்படையாகக் கொண்ட உண்மைகள், அவதானிப்புக்கள் அல்லது அனுபவங்கள்; தரவு எண், விளக்கம் அல்லது கட்புலன் சார்ந்ததாக இருக்கலாம். தரவு மூலாதாரம் அல்லது பகுப்பாய்வு செய்யப்பட்ட, பரிசோதனை அல்லது அவதானிப்புச் சார்ந்ததாக இருக்கலாம். தரவு; ஆய்வுகூட குறிப்பேடுகள்; களக் குறிப்பேடுகள்; ஆரம்ப ஆராய்ச்சித் தரவு (ஆராய்ச்சித் தரவின் வன் பிரதி அல்லது கணினி மூலம் வாசிக்கப்படக் கூடிய வடிவம் உள்ளடங்கலாக); வினாக் கொத்துக்கள்; ஒலிநாடாக்கள்; ஒளிநாடாக்கள், மாதிரிகள்; புகைப்படங்கள்; படலங்கள்; சோதனைத் துலங்கல்கள் ஆகியனவற்றை உள்ளடக்கும். ஆராய்ச்சிச் சேகரிப்புக்கள்; கலைப்பொருட்கள்; விளக்க மாதிரிச் சான்றுகள்; மாதிரிகள் ஆகியவற்றை உள்ளடக்கும். தரவைப் பற்றிய ஆதார/ பிறப்பிடத்தைத் தகவல்; எவ்வாறு, எப்போது, எங்கே அது சேகரிக்கப்பட்டது மற்றும் எதனால் (உதாரணமாக உபகரணம்) என்பனவற்றையும் கூட உள்ளடக்கலாம். தரவினை உருவாக்க, சிறுகுறிப்பிட அல்லது பகுப்பாய்வு செய்ய பயன்படுத்தப்பட்ட மென்பொருள் குறியீடும் கூட உள்ளடக்கப்படலாம்; என வரையறுக்கப்படுகிறது." (Australian Research Data Commons இல், 2019:1, மெல்பேர்ண் பல்கலைக்கழகம்).

நிறுவனம்சார் மட்டத்தில் ஆராய்ச்சித் தரவின் முறையான முகாமைத்துவம் பல்வேறு காரணங்கள் காரணமாக இன்றைய சமகால ஆராய்ச்சி ஆட்சிப் புலத்தின் ஒரு முக்கிய தோற்றப்பாடாக மாறியுள்ளது. இது பிற ஆராய்ச்சியாளர்களை தரவைக் கண்டறிந்து, விளக்கி, மீண்டும் பயன்படுத்த இயலச் செய்கிறது. இது கண்டுபிடிப்புக்களின் சரிபார்ப்பினை இயலச் செய்து அதன் மூலம் யாதாயினும் சாத்தியமான தரவு பொய்மைப்படுத்தப்படுதலையும் புனையப்படுத்தலையும் தவிர்க்கலாம். இது நிதி நிறுவனங்களின் முதலீடுகளுக்கான வருவாயை வழங்கும் தரவுத்தொகுப்புக்களின் நீண்டகாலப் பாதுகாப்பிற்கும் அணுகலுக்கும் கூட வசதியளிக்கிறது. ஆகவே அதிகரித்து வருகின்ற நிதியிடல் நிறுவனங்களின் எண்ணிக்கை தரவு முகாமைத்துவத்தை மானியப் பிரயோகங்களின் ஒரு அவசியமான அங்கமாக ஆக்குகின்றது.

## செயலெல்லை

இந்த ஆராய்ச்சி கொள்கைகளின் செயலெல்லை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் இணைந்த ஆராய்ச்சியாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற ஆராய்ச்சியை உள்ளடக்குகிறது.

## கொள்கை செயற்படுத்தல்

அ) பொறுப்பான அலுவலர் [கொள்கை வழிகாட்டல்களை மேம்படுத்தி, கண்காணித்து, மறு ஆய்வு செய்வதற்காக கொழும்புப் பல்கலைக்கழகம் அலுவலர் ஒருவரை நியமிக்க வேண்டும்]

ஆ) செயற்படுத்தல் அலுவலர் [மேலே அடையாளம் காணப்பட்ட செயலெல்லைக்கு இணங்க கொள்கையைச் செயற்படுத்துவதற்கு கொழும்புப் பல்கலைக்கழகம் அலுவலர் ஒருவரை நியமிக்க வேண்டும்]

இ) மறு ஆய்வு - இந்தக் கொள்கை ஒவ்வொரு மூன்று வருடங்களின் பின்னர் [அல்லது பல்கலைக்கழக அதிகாரத்தினால் தீர்மானிக்கப்பட்டவாறு] மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

**கொள்கை**

1. **ஆராய்ச்சித் தரவு மற்றும் பதிவுகளின் முகாமைத்துவம்**

அ) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களினால் உருவாக்கப்பட்ட ஆராய்ச்சித் தரவு மற்றும் பதிவுகள் அடையாளங் காணக்கூடியதாகவும் தேவையான போதெல்லாம் மீளத் தருவிக்கக்கூடியதாகவும் நாட்டினது, பல்கலைக்கழகத்தின் மற்றும் நிதியிடல் நிறுவனங்களின் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க பாதுகாப்பாகப் பேணப்படுவதனை பல்கலைக்கழகம் உறுதிப்படுத்த வேண்டும்.

ஆ) ஆராய்ச்சித் திட்ட நிறைவின் பின்னர் குறைந்தபட்சம் ஐந்து [05] ஆண்டுகளுக்கு, அல்லது அதற்கான அவசியத்தை ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டால் நீண்ட காலத்திற்கு, ஆராய்ச்சித் தரவு மற்றும் பதிவுகளை பல்கலைக்கழகம் தக்கவைத்திருக்க வேண்டும். தரவு மற்றும் பதிவுகளின் அகற்றல் இலங்கையின் தேசிய சுவடிகள் காப்பகத் திணைக்களத்தின் பொருத்தமான சுற்றறிக்கைக்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும்.

இ) ஆராய்ச்சி தரவு மற்றும் பதிவுகளைப் பேணுவதற்காகப் பொருத்தமான மென்பொருளைப் பயன்படுத்தி ஒரு காப்பகத்தை (அல்லது காப்பகங்களை) பல்கலைக்கழகம் பராமரிக்க வேண்டும். [முகாமைத்துவத்தால் தீர்மானிக்கப்பட்டபடி காப்பகத்தை மையமாக அல்லது பீட மட்டத்தில் பேண முடியும்]

ஈ) அனைத்து தொடர்புடைய தரவுகளையும் பதிவு செய்ய ஆராய்ச்சி தரவு காப்பகத்திற்கு மேலதிகமாக ஒரு ஆராய்ச்சித் தரவு பதிவேட்டை பல்கலைக்கழகம் பராமரித்தல் வேண்டும் (இது குறிப்பிட்ட தக்கவைப்பு காலத்தின் முடிவில் காப்பகத்திலிருந்து அகற்றப்பட்ட தரவுகளின் பதிவுகளைக் கொண்டிருக்கும்)

2. **ஆராய்ச்சியாளர்கள்**

அ) சேகரிப்பு / உருவாக்க முறை; என்ன என்ன ஆவணங்கள் மற்றும் மீற்றாத் தரவு வழங்கப்படும்; நெறிமுறை சிக்கல்கள், பதிப்புரிமை மற்றும் புலமைச் சொத்துரிமை எவ்வாறு நிர்வகிக்கப்படும்; தரவு எவ்வாறு சேமிக்கப்படும் மற்றும் ஆராய்ச்சியின் போது காப்புப் பிரதி எடுக்கப்படும்; தரவின் பாதுகாப்பு எவ்வாறு பராமரிக்கப்படும்; தரவுக்கான அணுகல் எவ்வாறு நிர்வகிக்கப்படும்; என்ன என்ன தரவைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும், எவ்வளவு காலம்; என்ன என்ன தரவு மற்ற ஆராய்ச்சியாளர்களுடன் பகிரப்பட வேண்டும், எப்படி; தரவைப் பகிர்வதில் ஏதேனும் கட்டுப்பாடுகள் (அதாவது, இரகசிய அல்லது தனிப்பட்ட தரவு); தக்கவைப்பு காலத்தின் முடிவில் தரவின் அழிப்பு எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும், மேலும் ஆ.த.மு. திட்டத்தை செயல்படுத்த என்ன என்ன வளங்கள் தேவைப்படும் என்பனவற்றை உள்ளடக்கி, சேகரிக்கப்பட்ட / உருவாக்கப்பட்ட தரவுகளின் வகையை உள்ளடக்கிய மானிய விண்ணப்பத்துடன் ஆராய்ச்சியாளர்கள் ஒரு சுருக்கமான ஆராய்ச்சித் தரவு முகாமைத்துவத் திட்டத்தை (ஆ.த.மு.) பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்;

ஆ) ஆராய்ச்சியாளர் அல்லது ஆராய்ச்சி அணி என்ற வகையில், முதன்மை ஆய்வாளர், பின்வருவனவற்றை உறுதிப்படுத்த வேண்டும்

i. ஆ.த.மு. திட்டம் உருவாக்கப்பட்ட ஆவணத்திற்கு இணங்க செயற்படுத்தப்படுகிறது, மேலும் யாதாயினும் விலகல் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில், ஒரு மறுசீரமைக்கப்பட்ட ஆ.த.மு. திட்டம் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ii. பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தரவு மற்றும் பதிவுகள் துல்லியமானவை, முழுமையானவை, உண்மையானவை மற்றும் நம்பகரமானவை

iii. ஆராய்ச்சித் தரவு மற்றும் பதிவுகள் மீளத் தருவிக்கக்கூடிய விதத்தில் சேமிக்கப்பட்டுள்ளன

iv. காப்பகத்தில் சேர்க்கப்படுவதற்காக ஆராய்ச்சியின் முடிவில் தரவு மற்றும் பதிவுகள் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

v. திட்டம் ஒரு கூட்டுத்திட்டமாக இருக்கின்ற போது, தேவையான ஒத்திசைவுடன் பல்கலைக்கழகத்திற்கு பொருத்தமான தரவு மற்றும் பதிவுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன

vi. தனிப்பட்ட அல்லது உணர்திறனான தரவு பல்கலைக்கழத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பொருத்தமான நடவடிக்கைகளின் ஊடாக தரவின் நம்பகத்தன்மை பேணப்பட வேண்டும்.

vii. தக்கவைப்புக் காலத்தின் முடிவில் ஆ.த.மு. திட்டத்திற்கு இணங்க தரவு மற்றும் பதிவுகள் அழிக்கப்படுகின்றன.

viii. ஆராய்ச்சியாளர் அல்லது முதன்மை ஆய்வாளர் பல்கலைக்கழகத்தை விட்டு இடைவிலகினால் அல்லது ஆராய்ச்சியிலிருந்து பின்வாங்கினால் ஒரு பொருத்தமான நபர் அல்லது நபர்கள் அடையாளங் காணப்பட்டு ஆ.த.மு. இனைச் செயல்ப்படுத்துவதற்கான பொறுப்புக்களைப் பொறுப்பேற்பதற்கு பெயரிடப்பட வேண்டும்

ix. ஆராய்ச்சி உதவியாளர்கள் அல்லது மாணவர்களுக்கு ஆ.த.மு. திட்டம் பற்றியும் இறுதித் தரவு பல்கலைக்கழத்தின் களஞ்சியத்திற்குச் சமர்பிக்கப்பட வேண்டியது பற்றியும் அறிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

### 3. பீடாதிபதிகள் மற்றும் துறைகளின் தலைவர்கள்

பீடாதிபதிகள் மற்றும் துறைகளின் தலைவர்கள்

அ) ஆ.த.மு. திட்டம் பற்றியும் பல்கலைக்கழகத்தின் அதன் செயற்படுத்தல் மூலோபாயம் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும்

ஆ) அனைத்து பீட உறுப்பினர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களிடையே ஆ.த.மு. திட்டம் பற்றிய விழிப்புணர்வை உயர்த்தல்

இ) மானிய விண்ணப்பங்களுடன் ஒன்றாக ஆ.த.மு. திட்டமொன்று சமர்ப்பிக்கப்படுவதனை உறுதிப்படுத்த வேண்டும்

ஈ) ஆராய்ச்சியாளர்கள் சமர்ப்பிக்கப்பட்ட ஆ.த.மு. திட்டம் மற்றும் பல்கலைக்கழகத்தின் கொள்கையைக் கடைப்பிடிப்பதனை உறுதிப்படுத்த வேண்டும்

உ) காப்பகத்தினைப் பராமரிப்பதற்கு திருப்திகரமான உட்கட்டுமானத்தை வழங்குவதன் ஊடாக (பீட மட்டத்தில் பராமரிக்கப்பட்டிருப்பின்), ஆதரவளிக்க வேண்டும்

ஊ) ஆராய்ச்சித் தரவு பதிவகதின் பதிவுகள் காலத்திற்குக் காலம் புதுப்பிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல்

**4. பல்கலைக்கழக நூலகம்**

பல்கலைக்கழகத்தின் நூலகவியலாளர்:

அ) ஆ.த.மு. திட்டத்தினைப் பற்றியும் பல்கலைக்கழகத்தின் செயல்படுத்தல் மூலோபாயத்தினைப் பற்றியும் அறிந்திருத்தல்

ஆ) ஆ.த.மு. திட்டம் தொடர்பாக அனைத்துப் பணியாளர் குழாம் உறுப்பினர்களிடையே விழிப்புணர்வினை உயர்த்துதல்

இ) பொருத்தமான மென்பொருளினைப் பயன்படுத்தி ஆ.த.மு. திட்டத்தினைத் தயாரிப்பதற்கு ஆராய்ச்சியாளர்களுக்கு உதவியளித்தல்

ஈ) பொருத்தமான கருவிகள் மற்றும் நூலகர்களின் திறன்களைப் பயன்படுத்தி ஆராய்ச்சி தரவுக் களஞ்சியம் மற்றும் மத்திய ஆராய்ச்சி தரவு பதிவகம் (மத்திய அல்லது பீட மட்டத்தில்) பராமரிக்கப்படுதவற்கு ஆதரவளித்தல்

# அறிவினைப் பரப்புதல்

கொழும்புப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புக்கள் மற்றும் முடிவுகளின் பரப்புதல்களுக்கு வசதியளித்து ஊக்குவிக்கிறது. இந்த நோக்கத்திற்காக:

அ) பல்கலைக்கழகம் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுதல் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகள் தொடர்பாக பயிற்சி மற்றும் செயலமர்வுகளை வழங்குவதுடன் அதன் சொந்த டிஜிடல் மற்றும் பதிப்பித்தல் வசதிகளைத் தாபிக்கும்.

ஆ) மாணவர்கள், புதிய ஆராய்ச்சியாளர்கள் மற்றும் இளைய கல்வியாளர்கள் தங்கள் ஆராய்ச்சி வெளியீடுகள் மற்றும் விளக்கக்காட்சிகளின் தரத்தை அதிகரிக்க பல்கலைக்கழகம் வளங்களையும் ஆதரவு சேவைகளையும் வழங்கும்.

இ) ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளை புலமைசார் பார்வையாளர்களுக்கு மேலதிகமாக பொது மக்களிடம் பரப்ப ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஆய்வில் பங்கேற்பாளர்களிடையே ஆராய்ச்சி முடிவுகளை பரப்புவது அல்லது கொள்கை சுருக்கங்கள், செய்தித்தாள் கட்டுரைகள், காணொளிகள் போன்றவற்றினைப் பரப்புவது இதில் அடங்கும்.

ஈ) ஆராய்ச்சியாளர்கள் (மாணவர்கள், ஊழியர்கள், கொழும்பு பல்கலைக்கழகத்தின் இணைந்த ஆராய்ச்சியாளர்கள்) அவர்களின் பகுப்பாய்வு மற்றும் கண்டுபிடிப்புகளை வழங்குவதில் நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டும், மேலும் அவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்பதில் 'போலிவார்ப்பு[1]' போன்ற நடைமுறைகளில் ஈடுபட வேண்டும் என்பதற்கு ஏற்றவாறு தரவை கையாளுவதில் முறைகேடான அல்லது "செழிப்பானதை மட்டும் தெரிதல்" ஆகியவற்றில் ஈடுபடக்கூடாது"

உ) ஆராய்ச்சி அறிவுப் பரப்புதலில் சுயமயமாக்கப்பட்ட உள்ளடக்கம் உட்பட திருட்டுத்தனமான உள்ளடக்கம் இருக்கக்கூடாது

ஊ) மற்றவர்களின் அறிவினை கொள்ளையடிக்கின்ற பருவவிதழ்கள், மாநாடுகள் மற்றும் "புகழ்பாடும்" வெளியீடுகள் ஆராய்ச்சியைப் பரப்புவதற்கு ஏற்றுக் கொள்ளக்கூடிய வடிவங்கள் அல்ல. ஆராய்ச்சியாளர்கள் தங்கள் ஆராய்ச்சிகளை வெளியிட அல்லது முன்வைக்க இந்த வழிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

எ) ஆராய்ச்சி மேற்பார்வை அல்லது ஆராய்ச்சி நிதியிடல் அல்லது ஆராய்ச்சியின் திசையிலும் அதன் கண்டுபிடிப்புகளிலும் மேற்கொள்ளப்பட்ட தேவையற்ற

[1] 'ஹார்கிங்-போலிவார்ப்புக்கள்' பெறுபேறுகள் தெரிந்த பின்னர் கருதுகோளமைத்தல் என்பது ஒரு பிந்தைய தற்காலிக கருதுகோளை ஒருவரின் ஆராய்ச்சி அறிக்கையில் உண்மையில் ஒரு முன்னோடி கருதுகோளாக இருந்தது போல் (அதாவது, ஒருவரின் பெறுபேறுகளினால் அறியப்பட்ட அல்லது அடிப்படையில்) முன்வைப்பதாக வரையறுக்கப்படுகிறது

செல்வாக்குப் பிரயோகம் தொடர்பாக எந்தவொரு நலன் முரண்பாடுகளும் இருத்தல் கூடாது

ஏ) கூட்டு ஆராய்ச்சி அல்லது பிற நிறுவனங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி தொடக்கத்தில் இருந்தே ஆராய்ச்சியைப் பரப்புவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியிருக்க வேண்டும். தரவின் உரிமையைப் பற்றிய ஒப்பந்தங்களும், அதன் விளைவாக காப்புரிமைகள், வெளியீடுகள் மற்றும் தரவை அடிப்படையாகக் கொண்ட பிற வெளியீடுகள் போன்ற ஒப்பந்தங்களும் இதில் அடங்கும்

ஐ) ஆராய்ச்சி எழுதுதல் அல்லது விளக்கக்காட்சிகளின் படைப்புரிமை ஆய்வின் பங்களிப்பின் அடிப்படையில் இருத்தல் வேண்டும். படைப்புரிமையின் வரிசை ஒத்துழைப்புடன் தீர்மானிக்கப்பட வேண்டும் மற்றும் பங்களிப்பின் தன்மையை பிரதிபலிக்க வேண்டும்

ஒ) பரப்புதலில், ஆய்வுக்கு பங்களித்த எந்தவொரு தரப்பினருக்கும் உரிய அங்கீகாரம் அளிக்கப்பட வேண்டும். இவை நிதி ஆதாரங்கள், ஆராய்ச்சி ஆதரவு சேவைகள் (புள்ளிவிவர பகுப்பாய்வு, மொழிபெயர்ப்பாளர்கள் போன்றவை), அத்துடன் மேற்கோள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் அறிவார்ந்த பங்களிப்புகளை அங்கீகரிப்பது.

ஓ) இலங்கையில் சிங்கள மற்றும் தமிழ் ஆராய்ச்சி வெளியீடுகள் இதுவரை சுட்டியிடப்பட்ட தளங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதால், சிங்களம் / தமிழிற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி எழுதும் பாணியில் வெளியீடுகள் எழுதப்படுவதை; வெளியீடுகள் சிறப்பாக வழங்கப்படுகின்றன, நாட்டின் புகழ்பெற்ற வெளியீட்டு நிறுவனங்களால் வெளியிடப்படுகின்றன, மேலும் அவை அறிவார்ந்த சக மதிப்பாய்வின் தலையங்க செயல்முறையைப் பின்பற்றியுள்ளன என ஆராய்ச்சியாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

ஔ) தரவுப் பாதுகாப்பு, இரகசியத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் எந்தவொரு உடன்பட்ட வெளிப்படுத்தாத உடன்படிக்கைகளை (வெ.உ.) ஆராய்ச்சியாளர்கள் மதிக்க வேண்டும். தரவு வெளியிடப்பட்ட நாளிலிருந்து குறைந்தபட்சம் 05 (ஐந்து) ஆண்டுகளுக்கு தக்கவைக்கப்பட வேண்டும்

க) ஆராய்ச்சி பரப்புதலின் ஒரு பகுதியாக தரவு கிடைக்கும்போது அல்லது பகிரங்கமாக கிடைக்கச் செய்யப்படும் போது (அதாவது, சஞ்சிகைகள் அல்லது தரவு பகிர்வு

தளங்களுக்கு), அத்தகைய பகிர்வு ஒரு நெறிமுறையான விதத்தில் பகிரப்பட வேண்டிய அதே நேரத்தில் பங்கேற்பாளர்களின் இரகசியத்தன்மையையும் தனியுரிமையையும் பேணுதல் வேண்டும்

ஙு) கடுமையான, பரந்த பரப்புதலை உறுதி செய்வதற்கும் கற்பித்தல், கொள்கை மற்றும் நடைமுறையில் பயன்படுத்துவதற்கும் ஆராய்ச்சியை அணுகக்கூடியதாகவும் கிடைக்கக்கூடியதாகவும் மாற்றுவது முக்கியம் ஆகும். திறந்த அணுகல் சஞ்சிகைகளில் வெளியிடுவது சஞ்சிகை / தளத்தின் நம்பகத்தன்மைக்கு உட்பட்டு ஊக்குவிக்கப்படுகிறது. ஆராய்ச்சியாளர்கள் தங்கள் வெளியீடுகளுக்கு கொழும்புப் பல்கலைக்கழக நூலகத்தின் மின்-காப்பகம் மூலமாகவோ அல்லது பீட / துறை வலைப்பக்கங்கள் மூலமாகவோ (சஞ்சிகை தடை நிபந்தனைகளுக்கு உட்பட்டு) அணுகலை வழங்க வேண்டும்.

ச) தத்துவக் கலாநிதி, தத்துவ முதுமாணி, விஞ்ஞான முதுமாணி மற்றும் கலை முதுமாணி ஆராய்ச்சி கூறுகளைக் கொண்ட அனைத்து ஆய்வறிக்கைகளும் பல்கலைக்கழகத்தின் மின்-காப்பகத்தில் காப்பகப்படுத்தப்பட வேண்டும். கொழும்பு பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகத்தால் வசதியளிக்கப்பட்ட ஒரு ஆய்வு திருட்டுச் சோதனை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஆய்வறிக்கையின் இலத்திரனியல் பதிப்பை மின்-காப்பகத்திற்கு சமர்ப்பித்த பின்னரே பட்டத்தினை வழங்க வேண்டும். ஆய்வறிக்கை பதிவேற்றப்படாததற்கான ஏதேனும் காரணங்கள் இருப்பின் (உதாரணமாக: காப்புரிமை விண்ணப்பத்திற்கான சாத்தியம்) அது எழுத்துப்பூர்வமாக வழங்கப்பட வேண்டும்

ஞ) வெளியீடுகளின் பல்கலைக்கழக மின்-காப்பகம் ஒரு ஒழுங்குக் கிரமமான அடிப்படையில் புதுப்பிக்கப்பட வேண்டும், மேலும் அனைத்து மாநாட்டு நடவடிக்கைக் குறிப்புக்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுக்கட்டுரைச் சுருக்கங்கள் மின்-காப்பகத்தில் பதிவேற்றப்பட வேண்டும்

ட) ஒவ்வொரு ஆண்டும் ஆராய்ச்சி கொடுப்பனவு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும்போது, ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி சுருக்கங்களை மின் காப்பகத்தில் பதிவேற்ற வேண்டும் மற்றும் மாநாட்டு நடவடிக்கைகள் உள்ளிட்ட ஆராய்ச்சிக்கான ஆதாரங்களுக்கான இணைப்பை வழங்க வேண்டும்

ண) ஆராய்ச்சியாளர்கள் எப்பொழுதும் தங்கள் ஆராய்ச்சியை உயர் தாக்க சுட்டியுடைய சஞ்சிகைகளில் வெளியிட முயற்சிக்க வேண்டும் மற்றும் உயர் தாக்க சஞ்சிகைகளால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வலுவான வழிமுறைகளை கடைபிடிக்கும் உயர்தர ஆராய்ச்சி ஆய்வுகளில் ஈடுபட முயற்சிக்க வேண்டும்.

த) புகழ்பெற்ற சஞ்சிகைகளில் வெற்றிகரமாக எவ்வாறு வெளியிடுவது என்பது குறித்து இளைய ஆராய்ச்சியாளர்களுக்கு வழிகாட்டும் வகையில், ஒவ்வொரு துறையிலும் உயர்மட்ட ஆராய்ச்சியாளர்களுடன் வள நபர்களாக உயர் பட்டதாரிகளுடன் பல்கலைக்கழகம் செயலமர்வுகளை ஏற்பாடு செய்யும்.

ந) உயர்ந்த தரமான ஆராய்ச்சித் திட்டங்கள் ஆராய்ச்சி முறையை வெளியிடுவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும், அல்லது ஆய்வை மேற்கொள்ளும்போது, திட்டங்கள் தொடர்பான முக்கியமான வழிமுறை மற்றும் நெறிமுறை சிக்கல்கள் மதிப்பாய்வாளர்களால் மதிப்பாய்வு செய்யப்படும். இது ஒரு உயர் தரமான ஆராய்ச்சி ஆய்வுகளுக்கு பங்களிக்கும், பின்னர் இது உயர் தாக்க சஞ்சிகையில் வெளியிடப்படலாம்

ப) ஒவ்வொரு கல்விசார் பணியாளர்களும் ரிசர்ச் கேட், பப்ளன்ஸ், அகாடெமியா.இ.டி.யூ., மற்றும் கூகிள் ஸ்காலர் கணக்குகளைக் கொண்டிருப்பதுடன் அவற்றைப் பகிரங்கப்படுத்த வேண்டும், இதனால் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி வெளியீடுகளை சுயாதீன தரவரிசை அமைப்புகளால் அணுகக் கூடியதாகவிருக்கும். ஆராய்ச்சியாளர்கள் ORCID ஐடியைப் பெறவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்

**பார்வைகளும் முற்கோள்களும்**

அ) பல்கலைக்கழக துறைகளுக்குள், சிரேஷ்ட ஆராய்ச்சியாளர்கள் / சகாக்கள் ஆகியோர் இளைய ஆராய்ச்சியாளர்கள் / சகாக்கள் நடத்திய ஆராய்ச்சியில் தேவையற்ற செல்வாக்கினைச் செலுத்துகிறார்கள். ஆராய்ச்சியில் அவர்களது பங்கை உரிய முறையில் ஒப்புக் கொள்ளாமல், அவர்களின் யோசனைகளை மேம்படுத்துவது அல்லது கையகப்படுத்துதல் மற்றும் அவற்றை தங்களின் சொந்த ஆக்கமாகக் கடந்து செல்வது மற்றும் சில பாடப் பிரிவுகளில் ஆராய்ச்சியின் தீவிர ஊக்கமறுத்தல் ஆகியவற்றுடன் ஆராய்ச்சியின் கணிசமான பகுதிகளைச் செய்ய இளைய சகாக்களைப் பயன்படுத்துவது என்பவை இதில் அடங்கும். இந்த எதிர்மறை

நடைமுறைகள் அத்தகையவை என அடையாளம் காணப்பட வேண்டியதுடன் தீவிரமாகத் தவிர்க்கப்படல் வேண்டும்

ஆ) இளைய சகாக்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிக்கான நிதி வாய்ப்புகளை சிரேஷ்ட சகாக்கள் தீர்மானிக்கும் நிலையில் உதாரணமாக: சிறிய மானியங்களுக்கான ஆராய்ச்சி விண்ணப்பங்களை பரிந்துரைக்கும் குழுக்களின் உறுப்பினர்களாக), எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் இருக்க வேண்டும்

இ) சிரேஷ்ட நிர்வாக மட்டங்களில் உள்ள அதிகாரிகளின் உணர்வுகள் மற்றும் அணுகுமுறைகள் முன்மொழியப்பட்ட ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் திட்டங்களுக்கான மதிப்பீடு மற்றும் ஒப்புதலுக்கான அளவுகோல்களுக்கான அடிப்படையாக இருத்தல் கூடாது. இதுபோன்ற சந்தர்ப்பங்களில், கொழும்புப் பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர்களின் சுயாதீனக் குழுவில் தங்கள் முன்மொழிவை பிரதிநிதித்துவப்படுத்தவும் மதிப்பீடு செய்யவும் கேட்டுக்கொள்வதன் மூலம் நலன்களின் முரண்பாடுகளைத் தீர்க்க ஆராய்ச்சியாளர்களுக்கு உரிமை இருக்க வேண்டும்

# கொழும்புப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்தித் தரமுயர்த்துவதற்கு நிறுவனம்சார் நடவடிக்கைகள்

அ) மையப்படுத்தப்பட்ட முகாமைத்துவம்

அனைத்து ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கம் தொடர்பான நடவடிக்கைகள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தின் (இனிமேல் ஆ.மே.மை.) கீழ் மேற்கொள்ளப்படும். ஆ.மே.மை. உம் கூட கொழும்புப் பல்கலைக்கழகத்தின் இளம் ஆராய்ச்சியாளர்களுக்காக பயிற்சி வழங்குதல் மற்றும் செயலமர்வுகள் மூலம் ஒரு திறன்களைக் கட்டியெழுப்பும் பணியினை ஆற்றுகின்றது.

ஆ) ஒரு சிந்தனைக் குழாமைத் தாபித்தல்:

சிரேஷ்ட ஆலோசகர், ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி வர்த்தகமயமாக்கல், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்கள் தொடர்பான நிலையங்களின் அனைத்துப் பணிப்பாளர்கள், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட நூலகர், மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சட்ட மற்றும் ஆவணமாக்கலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (சட்ட அலுவலர்) ஆகியோரை உள்ளடக்கிய ஒரு சிந்தனைக் குழாமைத் தாபித்தல்.

இ) ஆராய்ச்சிக் குழுக்கள்

ஆராய்ச்சி நடைமுறைகளுடன் இணங்குவதனையும் ஆராய்ச்சி நேர்மைத்திறனுக்கு பாதுகாப்பளிப்பதனையும் உறுதிப்படுத்துவதற்கு அனைத்துப் பீடங்களிலும் ஆராய்ச்சிக் குழுக்களின் வகிபாகம் விரிவாக்கப்பட்டு வலுவூட்டப்படல் (இரண்டு மட்டங்களில் கண்காணிப்பு - முன்மொழிவு மட்டம் மற்றும் ஆராய்ச்சி அல்லது புத்தாக்கத்தின் இறுதி விளைவு மட்டம்)

ஈ) அறிவினைப் பரப்புதல்

கொழும்புப் பல்கலைகழகத்தின் பதிப்பகத்தினை இணைத்து பணியாளர் குழாம், இளங்கலை மாணவர்கள் மற்றும் பட்டப்பின் மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளைப் பதிப்பிப்பதற்கு ஊக்குவித்தல்.

**பின்னிணைப்புக்கள்:**

அ) ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களின் மேம்பாட்டிற்காக ஒவ்வொரு பீடத்தினாலும் இனங்காணப்பட்ட பரப்புக்களின் பட்டியல்

ஆ) நிதியாளர்களின் பட்டியல்: ஒரு துண்டு நிதியாளராக/ உள்ளார்ந்த நிதியிடல்/ புறநிலை நிதியிடல்

இ) ஒரு பங்குதாரர்களின் பட்டியல்

ஈ) துறை/பீடம்/பல்கலைக்கழக மட்டங்களின் கீழ் வருகின்ற திட்டங்களுடன் கிரமமான காலக்கோடு

உ) நிதிகளின் பிறப்பாக்கம் மற்றும் செலவிடல்/ மேல்நிலை செலவுகள் தொடர்பில் பல்கலைக்கழகத்தின் வகிபாகம்/ மேல்நிலை அல்லாத கொள்கை/ சர்வதேச ஒத்துழைப்புக்கள் என்பன தொடர்பான ஒரு தெளிவான வழிகாட்டங்களின் ஒரு பட்டியல்

ஊ) பல்கலைக்கழக/ உள்ளூர்/ சர்வதேச மட்டங்களில் ஆராய்ச்சி முன்னுரிமைகளின் பட்டியல்

எ) வருடாந்த பல்கலைக்கழக நிகண்டு/ நிகழ்ச்சிநிரல்

ஏ) நெறிமுறை அனுமதி தொடர்பான ஆவணங்கள்

ஐ) கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஒரு விரிவான நெறிமுறைக் கொள்கை

ஒ) 


ஓ) தாவர மற்றும் விலங்குகள் பாதுகாப்பு கட்டளைச் சட்டம் மற்றும் வனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்

**அணி**

கலாநிதி ஜானகி ஜயவர்த்தன, பணிப்பாளர், ஆராய்ச்சி மேம்பாட்டிற்கான மையம், கொழும்புப் பல்கலைக்கழகம்
பேராசிரியர் ஷெவந்தி ஹொமர்-வன்னியசிங்கம், சிரேஷ்ட ஆலோசகர், ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி வர்த்தகமயமாக்கல், கொழும்புப் பல்கலைக்கழகம்
கலாநிதி நிஷாந்த சம்பத் புஞ்சிஹெவா, பணிப்பாளர், பல்கலைக்கழக வியாபார இணைப்புச் சிற்றலகு (*UBL* சிற்றலகு), சட்ட பீடம்
பேராசிரியர் பிரியதர்ஷனி கலப்பதி, மருந்தாக்கவியல் துறை, மருத்துவ பீடம்
பேராசிரியர் நஷீமா கமார்டீன், வணிகவியல் சட்டத் துறை, சட்ட பீடம்
பேராசிரியர் குமுதினி திசாநாயக்க, நிறுவனக் கற்கைகள் துறை, முகாமைத்துவ நிதிப் பீடம் (பட்டப் படிப்புகள் பீடத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி)
பேராசிரியர் பவித்திரா கைலாசபதி, மனித வளங்கள் முகாமைத்துவத் துறை, முகாமைத்துவ நிதிப் பீடம்
கால. கௌசல்யா பெரேரா, சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கிலத் துறை, கலைப் பீடம்
பேராசிரியர் துஷ்யந்தி மென்டிஸ், ஆங்கிலத் துறை, கலைப் பீடம்
கலாநிதி ஜி.ஏ.எஸ். பிரேமகுமார, சிரேஷ்ட விரிவுரையாளர், தாதியியல்ப் பீடம்
கலாநிதி பிரதீபா விஜேதுங்க, நூலகர், கொழும்புப் பல்கலைக்கழகம்
பேராசிரியர் நிர்மலீ பல்லேவத்த, விலங்கியல் துறை, விஞ்ஞான பீடம்
திருமதி தருஷிகா பத்திரனகே, சிரேஷ்ட உதவிப் பதிவாளர், விஞ்ஞான பீடம்
திரு. எம். ஷிபார், உதவிப் பதிவாளர், கல்விசார் மற்றும் வெளியீடுகள் கிளை

மொழிபெயர்ப்பு: இ. லோகேந்திரா, பிரதிப் பதிவாளர், மூலதன வேலைகள் கிளை